**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 77/2009**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | 02.03.2026 |
| **பெயர்** | **பத்மநாபன்** |
| **த/பெ** | **சங்கர்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.37. p.m**

**4 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் தரப்பில்**
**குறுக்கு விசாரணை–**

1. எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 71/1டி. வழக்கு சொத்து முதலில் யாருக்கு சொந்தமானது என்றால் ஆண்டிப்பரெட்டிக்கு சொந்தமானது. தற்போது வழக்கு சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் ஆண்டியப்பரெட்டி பெயரில் உள்ளது. அவரின் தந்தையார் பெயர் சண்முகரெட்டி. ஆண்டியப்பரெட்டி தந்தையார் பெயர் ( ருத்ரப்பரெட்டி) பெயரில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தந்தை பெயர் சங்கர்.

2. என் தந்தை பெயருக்கு சொத்து வந்ததாக ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து சண்முகரெட்டியாரின் மகன் ஆண்டியப்பரெட்டிக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள கூர்சிட்டு சரியாக முத்திரை தீர்வை இல்லை என்றால் சரிதான். ருத்தரப்பரெட்டியாரின் மகன் ஆண்டியப்பரெட்டி என்றும் அந்த பெயரை வைத்து கொண்டு வழக்கு சொத்தை அபகரிக்க முயல்கிறேன் என்றால் சரியல்ல. 01.04.2008–ல் எழுதப்பட்ட பவர் குறித்து தெரியுமா என்றால் தெரியும்.

3. அந்த சொத்துக்களை தான் 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு ஏகாம்பரம் கிராமணி என்பவர் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 4 மற்றும் 5 பிரதிவாதிகள் மேற்சொன்ன சொத்தினை ஆறுமுகம் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். கிரையம் பெற்ற ஆறுமுகம் மேற்சொன்ன சொத்துக்கை வீட்டு மனைகளாக பிரித்துவிட்டார் என்றால் தெரியாது. எனது பதிலுரையில் மேற்சொன்ன சங்கதியை குறிப்பிட்டுள்ளேன் என்றால் தெரியாது. 03.10.2024 ல் வில்லங்கம் போட்டு பார்த்த பிறகு தான் முரளிகிருஷ்ணா என்பவர் பெயரில் சொத்து மாற்றம் செய்யப்பட்டது தெரியவந்தது.

4. வழக்கு சொத்து நான் கூறுயது போல் எந்த தைல மரமும் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. 4 மற்றும் 5 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினோமா என்றால் அனுப்பினோம். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்குரையில் சொத்து விவரத்தின் 4 எல்லைகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கான விவரங்கள் எதுவும் எனக்கு தெரியவில்லை என்றும் பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சண்முகரெட்டியின் மகனான ஆண்டியப்பரெட்டிக்கு சொந்தம் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.53.p.m.**